**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண். 108/2018</u>**
**<u>நாள் 08/06/2026 திங்கட்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 2-வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54-வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – சந்திரன் (PW2) | த/பெயர் – மாரி |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை–**

**1.** வழக்கு சொத்தில் நான் தற்போது வசித்து வருகிறேனா என்றால் இல்லை என் தம்பி மனைவி டில்லியம்மாள், மற்றும் அவரது பிள்ளைகள் சங்கீதா மற்றும் வசந்தகுமார் விசிக்கின்றனர். நான் மேற்கூறிய விவரம் பொய் என்றும் மேற்படி நபர்கள் வழக்கு சொத்தில் வசித்துவரவில்லை என்றால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றும் என்ன தொழில் செய்கிறேன் என்றால் 8ம் வகுப்பு படித்துள்ளேன் செக்கியுரிட்டியாக வேலை பார்க்கிறேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் டில்லியம்மாள், வசந்தகுமார், சங்கிதா ஆகியோர் அமாவாசை மற்றும் 4 நபர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என தெரியுமா என்றால் 2001ம் ஆண்டில் இருந்து வாதிகள் வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளனர் அதன் அடிப்படையில் வழக்கு சொத்து அவர்களுடையது என கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

2. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் பெருங்காவூர் கிராமத்தில் உள்ளது. நான் அதே கிராமத்தில் தான் குடியுள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் பரப்பளவு தெரியுமா என்றால் சர்வே எண் 255/1A5 ஆகும், அதன் விஸ்தீரணம் 13.50 செண்ட் ஆகும். வழக்கு சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கான பட்டா 2 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தை முனுசாமி என்பவர் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி பட்டாவின் அடிப்படையில் பிரதிவாதிகள் 1,3 முதல் 5 வரையிலானவர்கள் 2ம் பிரதிவாதி சாந்தி பெயரில் அக்கு விடுதலை பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எனக்கு உறவுமுறையா என்றால் 1ம் வாதி என்னுடைய தம்பியின் மனைவி ஆவார். 2 மற்றும் 3ம் வாதி 1ம் வாதியின் பிள்ளைகள் ஆவார்கள் வாதிகள் கேட்டுக்கொண்டதற்காக தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 20 வருடங்களாக வழக்கு சொத்தில் தென்னை மரம் உள்ளதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சர்வே எண்ணில் வாதிகள் வரிசை வீடு கட்டுவதற்காக அரசு வாதிகளுக்கு 26,000/- பணம் முதல் தவணையாக கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றும் அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா ஆ 1 அக்கு விடுதலை பத்திரத்தின் படி 2ம் பிரதிவாதி தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றும் அவர் தான் அனுபவத்தில் உள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**